## சுருக்கம்

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீடு – புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், ஊர்மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் "எனது கிராமம்" என்கின்ற திட்டம் துவங்கப்படும் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.35.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொது(மறுவாழ்வு.2)த் துறை

**அரசாணை(நிலை)எண்.330**

**நாள்.29.05.2023.**
சோபகிருது, வைகாசி–15
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசுக் கடிதம் எண்.23052/ம.வா.2(2)/2022–4, நாள் 15.12.2022.
3. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ1/12706/2021, நாள் 02.03.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

> **"புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், ஊர்மக்களின் கல்வி மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் "எனது கிராமம்" என்கின்ற திட்டம் துவங்கப்படும். இதில் பள்ளி, மருத்துவமனை, நூலகம் போன்ற கட்டடங்களைக் கட்டித் தரவும், சீரமைத்திடவும் புலம் பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்".**

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் "எனது கிராமம்" என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்காக திட்டவட்டமான செலவினங்களுடன் (Clear cut proposal with the estimate for portal development) கூடிய திருத்தப்பட்ட கருத்துரு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் கோரப்பட்டது.

த.பி.பா..

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துருவினை தெரிவித்து அதனை செயல்படுத்திட ஏதுவாக ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யுமாறு அரசினை கோரியுள்ளார்:-

(i) **இணையதளம்:**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் வலைதள பக்கத்தில், "அயலகத் தமிழர்கள்" தங்களை பதிவு செய்து கொள்வதற்கான வசதி ஏற்படுத்தி தரப்படும், அவர்களது விவரங்கள், நிதி பங்களிப்புகள், மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் என அனைத்தும் வெளிப்படைத்தன்மையோடு இவ்வலைதளத்தில் வெளியிடப்படும்.

(i) **"எனது கிராமம்" என்னும் இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் அயலகத் தமிழர்களின் வாயிலாக அவர்களது சொந்த ஊரில் மேற்கொள்வதற்கான உத்தேச நலப்பணிகள்:**

- ஆரம்ப சுகாதார நிலையம், மருத்துவமனை போன்றவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் ஆய்வகங்கள், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், சமையல் கூடங்கள், சுற்றுச் சுவர்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் நூலகங்கள் போன்றவற்றை புதிதாக கட்டுதல் அல்லது மேம்படுத்துதல்.
- கிராமப்புறங்களில் சாலை மற்றும் பாலம் போன்ற வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தருதல், மழை நீர் சேகரிப்பு தொட்டிகள், நீர்த்தேக்கத் தொட்டிகள், குடிநீர் குழாய் வசதிகளை ஏற்படுத்துதல். மேலும், குளம், குட்டை போன்றவற்றை பராமரித்தல்.
- நூலகத்தின் தரத்தினை உயர்த்தும் விதமாக இணைய வசதி ஏற்படுத்தித் தருதல், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் புதிய புத்தகங்கள் வழங்குதல்.
- சுகாதார வசதிகளை மேம்படுத்தும் விதமாக கழிவறை, கழிவு நீர் கால்வாய் கட்டித்தருதல், திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல்.
- பூங்காக்கள், நீருற்று மற்றும் பிற சமுதாய கட்டடங்கள்.

(iii) **திட்ட நெறிமுறைகள்:**

- இத்திட்டத்திற்கென அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தால் தனியான வங்கி கணக்கு தொடங்கி அதில் அயல்நாட்டில் உள்ள தமிழர்கள் விரும்பும் பட்சத்தில் நிதி பங்களித்திட ஏற்பாடுகள் செய்யப்படும்.

- அயலகத் தமிழர்கள் தாங்கள் மேற்கொள்ள விரும்பும் சேவைகளை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- அயலகத் தமிழர்கள் தாங்கள் செய்திட விரும்பும் நலப்பணிகளுக்கு முறையான திட்ட மதிப்பீடுகள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் தயாரிக்கப்பட்டு, அயலகத் தமிழர் நலத்துறையின் ஆணையருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- குறிப்பிட்ட நலப்பணியினை மேற்கொள்ளும் அயலகத் தமிழருக்கு அதற்கான திட்ட மதிப்பீடுகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.
- திட்ட மதிப்பீடுகளின்படி குறிப்பிட்ட நலப்பணி செய்ய விரும்பும் அயலகத் தமிழரிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன், அரசுக்கு கருத்துரு அனுப்பி, உரிய விதிமுறைகளின்படி நிர்வாக ஒப்புதல் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- இப்பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் / அரசு நிறுவன அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான தொகை செயல்படுத்தப்படும் இடத்திற்கேற்றவாறு, அரசு நிறுவனங்கள் மூலமாக, தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம், 1998-இன் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் வழங்கப்படும்.
- மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தால், ஒவ்வொரு நிலையிலும், நலப்பணிகள் நடைபெறும் விவரங்களை பருவ வெளியீடாகப்பெற்று, அவ்விவரங்கள் உடனுக்குடன் நிதியளித்த அயலகத்தமிழர்களுக்கு தெரிவிக்கப்படும்.
- நலப்பணிகள் முடிவு பெற்றவுடன், அப்பணியிடங்களில் நிதியுதவி செய்தோரின் பெயர்ப்பலகைகள் வைக்கப்படும்.

**(iv) அறிவுப் பகிர்வு**

- "எனது கிராமம்" என்கின்ற இத்திட்டத்தின் கீழ் பங்குபெற விரும்பும் அயலகத் தமிழர்கள் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி தொழில்நுட்பம் மற்றும் தாங்கள் சார்ந்த எந்தத் துறையின் அனுபவத்தையும், அறிவையும் பகிரவும், வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவோர்களை ஏற்படுத்தவும், தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கவும் என எவ்வகையிலும் தங்கள் சேவையை தாய்நாட்டிற்கு வழங்கலாம்.
- அயலகத் தமிழர்களிடமிருந்து பெறப்படும் பங்களிப்புகள் நேரடியாக அரசின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு அதற்குரிய ரசீதுகள் வழங்கப்படும். இங்ஙனம் பெறப்பட்ட நிதியின் மூலம் நிறைவேற்றப்பட்ட சேவைப்பணிகள் குறித்து பங்களித்தவர்களுக்கு முழுமையான தகவல்களும் வழங்கப்படும். கல்வி, நலவாழ்வு சுகாதாரம், விவசாயம், குடிநீர், பாசனவசதிகள், சாலை வசதிகள், போக்குவரத்து, பெண்கள் பாதுகாப்பு, தமிழ்

மொழி வளர்ச்சி, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பங்கள் என எந்தத் துறையிலும் தங்களது சேவை பங்களிப்பை வழங்க வரவேற்கப்படுவார்கள்.

- இவ்வாறு அயலகத் தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகள் குறித்த பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் தொகுக்கப்பட்டு ஆண்டறிக்கையாக வெளியிடப்பட்டு, சிறந்த பங்களிப்பினை வழங்கிய அயலகத் தமிழர்களுக்கு ஆண்டுதோறும் "ஜனவரி 12-ஆம் நாள்" கொண்டாடப்படும் "அயலகத் தமிழர் தினத்தில்" அரசின் சார்பில் விருது வழங்கி கௌரவிக்கப்படும்.

**(v) செயல்படுத்தும் முறை:**

- இத்திட்டத்தில் பங்கெடுக்க விரும்பும் அயலகத் தமிழர்கள், இவ்வாணையரகத்தின் இணையதளத்தில் இதற்கென உருவாக்கப் பட்டுள்ள இணைய முகப்பின் மூலமாக தங்களை பதிவு செய்து கொண்டு, அதில் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி உரிய நிதியுதவி அளிக்கலாம்.
- மேற்குறிப்பிட்ட வசதிகளை மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தின் வலைதளத்தில் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மின்னாளுமை முகமையிடமிருந்து (Tamil Nadu e-Governance Agency) செயல்பாட்டுத் தேவைகள் விவரக் குறிப்பு (Functional Requirements Specification) பெறப்பட்டு, பின்வரும் இனங்களுக்கு ரூ.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யுமாறும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

**உத்தேச செலவினக் கூறுகள்:-**

| வ. எண் | பொருள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மென்பொருள் உருவாக்குதல் | 19,00,000 |
| 2 | ஓராண்டு பராமரிப்பு செலவினம் | 1,90,000 |
| 3 | TNeGA சேவை கட்டணம் | 52,250 |
| 4 | GST 18% | 3,85,605 |
| 5 | கணினி, அச்சுப்பொறி மற்றும் பிற பொருட்கள் | 2,72,145 |
| 6 | விளக்க குறும்படம் மற்றும் விளம்பரம் | 5,00,000 |
| 7 | இதர செலவினம் | 2,00,000 |
| | **மொத்தம்** | **35,00,000** |
| **(ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்)** | | |

மேலும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் தங்கள் ஆணையரகத்தால், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில்

3510 புதிய வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இக்கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆவணப்படுத்துதல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய பணிகளுக்காக தரவு பதிவு உள்ளீட்டாளராக 2 நபர்கள் வெளிமுகமை மூலம் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றனர் என்றும், அயலகத் தமிழர் நல வாரியத்தின் மூலமாக செயல்படுத்திட உள்ள இப்பணியினை மேற்கொள்ள, ஏற்கனவே துறையில் கட்டுமானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி பணியாளர்களைக் கொண்டு முதற்கட்டமாக செயல்படுத்திடலாம் என்றும், தேவையின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான பணியாளர்களை பின்னர் தெரிவு செய்து கொள்ளலாம் என்றும், இத்திட்டத்தில் தேவைப்படும் மாற்றங்களை மேற்கொள்ள அயலகத் தமிழர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, **"எனது கிராமம்"** என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மென்பொருள் உருவாக்குதல், ஓராண்டு பராமரிப்பு செலவினம், TNeGA சேவை கட்டணம் மற்றும் GST 18% ஆகிய செலவினங்கள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (Tamil Nadu e-Governance Agency) மின் ஆளுமை நிதியிலிருந்து (e-Gov Fund) ரூ.25.28 இலட்சத்தை பயன்படுத்தி உரிய பணிகளை மேற்கொள்வதற்கு, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையர் மற்றும் மின்னாளுமை இயக்குநர் (ம) முதன்மைச் செயல் அலுவலர், மின்னாளுமை இயக்குநரகம்/தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆகியோருக்கு அரசு அனுமதி வழங்குகிறது. மேலும், மேற்படி திட்டத்திற்காக கணினி, அச்சுப்பொறி மற்றும் பிற பொருட்கள் கொள்முதல் செய்வது, விளக்க குறும்படம் (ம) விளம்பரம் தயாரித்தல் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.9.72 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு - 800 ஏனையசெலவு
மாநிலச் செலவினங்கள் - AH வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்
305 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவுகள்.
(DPC Code-2235 01 800 AH 305 02) - Rs.2,00,000/-
308 விளம்பரமும் பிரச்சாரமும் - 01 விளம்பரக் கட்டணங்கள்.
(DPC Code-2235 01 800 AH 308 01) - Rs.5,00,000/-
376 கணினியும் துணைப் பாகங்களும் - 01 வாங்குதல்.
(DPC Code-2235 01 800 AH 376 01)" - Rs.2,72,000/-

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.9,72,000/-, 2023-24-ஆம் ஆண்டிற்கான

திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-24-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-24-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவையும் நிதி(பொது/வ.செ.பொ-1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அ.சா.எண்.4713077, நாள்.16.5.2023 மற்றும் நிதி(பொது)த் துறையின் அ.சா. எண்.20229/நிதி(வ.செ.பொ-II/நிதி(பொது)/2023, நாள்.29.5.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.177 (நூற்று எழுபத்து ஏழு). (IFHRMS ASL No.223050177)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்**
**அரசுச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5.
செயலாளர்,
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல்
சேவைகள் துறை, சென்னை - 600 009.
முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை - 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.
மின்னாளுமை இயக்குநர் (ம) முதன்மைச் செயல் அலுவலர்,
மின்னாளுமை இயக்குநரகம்/தமிழ்நாடு மின்னாளுமை முகமை,
சென்னை - 600 002.

<u>நகல்</u>
மாநில கணக்காயர், சென்னை-18.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

த.பி.பா..

சிறப்பு நேர்முக உதவியாளர்
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முகக் உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை
அமைச்சர் அலுவலகம் சென்னை-9.
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

30/5/2023
30/5/2023
**பிரிவு அலுவலர்**